DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **கண்ணன்** | Caste | : |
| Father Name | : | **பாஸ்கர்** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **26.03.2026.**

**PW - 7**

**( 1** முதல் **13, 15, 16** எதிரிகள் ஆஜர். **14** ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில், மேலகொண்டையம்பேட்டை தெற்கு தெருவில் குடியிருக்கிறேன். நான் நான்கு சக்கர வாகன பழுதுபார்க்கும் வேலை செய்கிறேன். போலிசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டேன், அது எதற்கு என்று தெரியாது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் மட்டும் **அதசாஆ.2** மற்றும் **அதசாஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரித்தபோது, கடந்த 10.08.2020 அன்று காலை 06.00 மணியளவில் நானும், பார்த்திபனும் அய்யன்வெட்டி தெருவில் இருந்தோம் என்றும், அப்போது போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், பின்பு 06.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து சேதமடைந்து கிடந்த ஸ்பிளண்டர் புரோ என்ற இருசக்கர வாகனத்தையும், அதன் உடைந்த பாகங்களையும் மற்றும் பெரிய ஜல்லிகற்கள் நான்கையும் எங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், மேற்படி இரண்டு ஆவணங்களிலும் நாங்கள் கையெழுத்திட்டோம் என்றும் போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு எதிரிகள் பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.